Registered as a News Paper　　மக்கள் 04　　விலை ரூபா; 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM　　Peoples Daily　　மக்கள் தினசரி

நாதம் 03　　திருவள்ளுவர் ஆண்டு 2023　　ஆனி 23　　07 - 07 - 1992　　செவ்வாய்க்கிழமை　　ஓசை 140

## 'நெய்தல்' ஒலிப்பதிவுநாடா வெள்ளியன்று வெளியீடு

விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தினர் 'நெய்தல்' என்னும் ஒலிப்பதிவு நாடாவினை வெளியிடவுள்ளனர். யாழ்/ புனித பத்திரிசியார் கல்லூரி, மதுரம் அரங்கில் 10 - 07 -92 வெள்ளி கிழமை மாலை 4.00 மணிக்கு வெளியீட்டு விழா இடம் பெறவுள்ளது. இந்த ஒலிப்பதிவு நாடாவினை விடுதலைப் புலிகள் கடற்புலிகள் அமைப்புக் கலைஞர்களை இணைத்து விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக்கழகம் உருவாக்கியுள்ளது. யாழ். மாவட்டகடற்புலிகள் அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் மறவன் தலைமையில் இடம்பெறவுள்ள வெளியீட்டு விழாவில் கடற்புலிகள் தளபதி கங்கைஅமரன் மங்களவிளக்கேற்றி (4 ஆம் பக்கம் பார்க்க)

# சிங்கள படைகள் சந்திக்கும் பேரிழப்பு

# வாடியடி சமரில் 37 ராணுவம் பலி

## பெரும் எண்ணிக்கையில் காயம்

(கொழும்பு)

நேற்று முன்தினம் வாடியடிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடந்த உக்கிரமோதலில் 37 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக இராணுவ அதிகாரியை மேற்கோள்காட்டி இந்திய வானொலி நேற்று மாலை தெரிவித்தது

இம்மோதல் குறித்துசெய்தி வெளியிட்டஇந்தியவானொலி கோயில் வயல் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும், சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இடையில் பலமணிநேரம் நீடித்த மோதலின் போதே இந்த 37 இராணுவத்தினரும் கொல்லப்பட்டதாகத் தெரிவித்தது. இதேவேளை நேற்று முன் (4 ஆம் பக்கம் பார்க்க)

## குமணவில் அத்தியாவசியப்பொருள்

''குமண'' கப்பல் அத்தியாவசியப்பொருட்களுடன் நேற்று பருத்தித்துறையை வந்தடைந்தது.

இக்கப்பலில் 1000 மெற்றிக் தொன் சீனி, 1500 மெற்றிக் தொன் உரம், 200 மெற்றிக் தொன் உப்பு, 10 மெற்றிக் தொன் மீன்ரின், 11.25 மெற்றிக் தொன் திரிபோஷா மற்றும் தனியார்துறைகளுக்கான மா, பருப்பு, யாழ். போதனா வைத்தியசாலைக்குத் தேவையான மருந்து மற்றும் [illegible] எடுத்துவரப்பட்டுள்ளன. (ப)

## விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது

## ராணுவ வட்டாரத்தில் அதிர்ச்சி

(கொழும்பு)

விடுதலைப்புலிகளால் வை-8 விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது சிறிலங்கா இராணுவ, அரசியல் தரப்பில் பலத்த அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சிறிலங்கா விமானப்படையில் உள்ள இரு பெரிய விமானங்களில் ஒன்றாகிய விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது என்பதோடு தற்போது வடக்கில் நடக்கும் போரில் கணிசமான பங்காற்றிவரும் விமானப்படை விமானங்களில் ஒன்றிற்குரிய இவ்விமானம் வீழ்த்தப்பட்டுள்ளமை இராணுவ அதிகாரிகளுக்கு பெரும்அதிர்ச்சியை உருவாக்கியுள்ளது

வடக்கில் தற்பொழுது நடைபெறும் போரில் இராணுவத்தினர் நூற்றுக்கணக்கில் படுகாயமடைவதனால் அவர்களை கொண்டுசெல்ல இதுபோன்ற விமானங்கள் அவசியம் தேவைப்படுகின்றது இந்நிலையில் இவ் வை-8 விமானம் வெடித்ததனால் ஏற்பட்ட இழப்பானது பெரியதொன்றாகும்.

## வானத்தில் வெடித்ததை பொதுமக்கள் பார்த்தனர்

(வடமராட்சிகிழக்கு)


சிறிலங்கா விமானப் படையின் வை-8 விமானம் நேற்று முன்தினம் சுட்டு வீழ்த்தப்பட்

பெரியளவில் வானத்தில் வட்டமிட்டு குண்டுகளை வீசிக்கொண்டிருந்த விமானத்தில் திடீரென பெரும் சத்தம்

## மக்கள் பார்வைக்கு விமானச் சிதறல்கள்

(நமது நிருபர்)

அரிப்பு, [illegible]



இயக்கச்சிப் பகுதியில் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகளால் சுடட்டு வீழ்த்தப்பட்ட வை - 8 ரக விமானத்தின் சிதைவுகளையும் கொல்லப்பட்ட விமானப்படையினரில் ஒருவரின் சடலத்தையும் மேலேயுள்ள படத்தில் காணலாம்.

## நேற்று சண்டை தணிவு குண்டுவீச்சு தாக்குதல் தொடர்கிறது

வாடியடிப் பகுதியில் நேற்று முன்தினம் சிறிலங்கா இராணுவத்தினருக்கு ஏற்பட்ட பாரிய இழப்புகளைத் தொடர்ந்தும் அப்பகுதியில் வை-8 விமானம் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டதைத் [illegible] மேற்கொண்டன

சிறிலங்கா இராணுவத்தினர் காலை முன்னேறும் முயற்சிகளை மேற்கொண்ட போதும் புலிகளின் எதிர்த்தாக்குதலால் முயற்சியைக் கைவிட்டனர்.

வெற்றிலைக்கேணி கட்டைக்காடு இராணுவ முகாமிலிருந்து இப்பகுதியை நோக்கி நேற்றும் தொடர்ச்சியான எறி (4 ஆம் பக்கம் பார்க்க)

(வடமராட்சி கிழக்கு)

சிறிலங்கா விமானப் படையின் வை-8 விமானம் நேற்று முன்தினம் சுட்டு வீழ்த்தப்பட்டதை பல பொதுமக்கள் நேரில் கண்டதாக தெரிவித்தார்கள்.

போர்முனையை அடுத்துள்ள மருதங்கேணி, செம்பியன்பற்றுப் பகுதி பொதுமக்களே இச் சம்பவத்தைத் தாங்களும் நேரில் கண்டதாக தெரிவிக்கின்றார்கள்.

பெரியளவில் வானத்தில் வட்டமிட்டு குண்டுகளை வீசிக்கொண்டிருந்த விமானத்தில் திடீரென பெரும் சத்தம் கேட்டதாகவும், அதனைத் தொடர்ந்து வானத்தில் தீப்பிழம்பும், உயர புகைமண்டலம் கிளம்பியதாகவும், பின்னர் கறுப்பு நிற துண்டுகள் நிலத்தை நோக்கி வீழ்ந்ததைத் தாம் கண்டதாகவும் தெரிவிக்கின்றார்கள் (36)

# உயிரிழந்தவர்களில் ஒருவர் துணைத்தளபதியின் மகன்?

(கொழும்பு)

இப் பகுதியில் சுட்டு வீழ்த்தப் பட்ட வை-8 ரக விமானத்தில் பயணம் செய்தவர்களில் ஒருவர் விமானப்படைத் துணைத் தளபதி வயிஸ் மார்ஷல் வால்ட்டர் பெர்ணான்டோவின் மகன் என்று இராணுவத் தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

விமானத்தில் இருந்த பத்தொன்பது பேருமே உயிரிழந்தனர் என்றும், அவர்களில் உயிரிழந்த ஆறு விமானப் படை அதிகாரிகளில் ஒருவர் வயிஸ் மார்ஷல் வால்ட்டர் பெர்ணான்டோவின் மகனும் ஒருவர் என்றும் இராணுவத் தரப்பு மேலும் தெரிவிக்கின்றது

# பலாலியில் சிறில்ரணதுங்கா படையினருக்கு அஞ்சலி

இதேவேளை பலாலி இராணுவ முகாமிற்கு நேற்று வந்த சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்கா, நேற்று முன்தினம் விடுதலைப் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்ட விமானத்திலிருந்து பலியாகிய ஆறு விமானப்படை அதிகாரிகளுக்கும் 13 விமானப்படையினருக்கும் அஞ்சலி செலுத்தியதாக தெரிவிக்கப்படுகிறது.

அவர் அங்கு உரையாற்றுகையில் இறந்தவர்களில் பெரும்பாலானோரை தமக்கு நன்கு தெரியுமென்று தெரிவித்தார்.

# வெற்றிகரமாக புலிகளே விமானத்தை வீழ்த்தினர்

## நிராகரிக்க முடியாது என்கிறார் அதிகாரி

(கொழும்பு)

சிறிலங்கா விமானப் படையின் சீனத் தயாரிப்பான வை-8 ரக விமானம் விடுதலைப் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டது குறித்துத் தற்போது கிடைத்திருக்கும் ஆதாரங்களின் படி புலிகள் வெற்றிகரமாக இந்த விமானத்தைச் சுட்டு வீழ்த்தியதை தம்மால் நிராகரிக்க முடியாது என்று பெயர் கூற விரும்பாத விமானப்படை அதிகாரிகள் கூறியுள்ளனர்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

# விமானச் சிதறல்கள்

(நமது நிருபர்)

இயக்கச்சிப்பகுதி வன்பரப்பில் வைத்து நேற்றுமுன்தினம் மாலை விடுதலைப் புலிகளின் விமான எதிர்ப்பு தாக்குதல் பிரிவினரால் சுட்டு வீழ்த்தப்பட்ட விமானத்தின் சிதைவுகளும் விமானியின் சடலமும் நேற்று முழுவதும் வலிகாமத்தின் பல பகுதிகளிலும் மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டது

சிறந்த வாகனம் ஒன்றில்விடுதலைப் புலிகளால கைப்பற்றப்பட்ட விமானச் சிதைவுகளும் விமானப்படை விமான ஓட்டிஒருவரின்சடலமும் வைக்கப்பட்டு சுன்னாகம், பண்டத்தரிப்பு, சித்தன்கேணி, சுழிபுரம், சங்கானை, சண்டிலிப்பாய், மானிப்பாய், நாச்சிமார் கோவிலடி, ஆரியகுளம், முதிரைச்சந்தை, கோப்பாய் நீர்வேலி, புத்தூர், ஆவரங்கால் அச்சுவேலி ஆகிய இடங்களின் பிரதான சந்திகளில் மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டன.

இவ் விமானத்தின் சிதைவுகளையும்இன அழிப்பில் ஈடுபட்ட விமானியின் சடலங்களையும் ஒவ்வொரு இடங்களிலும் நூற்றுக் கணக்கான மக்கள் நீண்ட வரிசையில் நின்று பார்வையிட்டனர். (ச)

# பாதுகாப்பு அதிகாரிகள் பலாலி முகாம் வருகை

(கொழும்பு)

சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில்ரணதுங்கவின் உயர் அதிகாரிகள் குழு ஒன்று நேற்றுக் காலை பலாலி முகாமிற்கு சென்றதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

சிறிலங்கா விமானப்படை விமானம் வானில் வெடித்துச் சிதறிய சம்பவம் குறித்து விசாரணை நடத்தவென அந்தக் குழு பலாலி சென்றது

கூட்டுப்படை தலைமையலுவலகம் இது குறித்து தகவல் வெளியிடுகையில் கூட்டுப்படை தலைமை செயலக தலைமை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு



வீரவேங்கை தமிழினியன்

05-07-92 அன்று புல்லாவெளியில சிறிலங்கா படையினருடனான மோதலில் வீரவேங்கை தமிழினியன் (யக்சன் -எதிர்மன்னசிங்கம் ஆனந்த

(4 ஆம் பக்கம் பார்க்க)

தொடர்ந்தும் அப்பகுதியில் வை-8 விமானம் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டதைத் தொடர்ந்தும் நேற்று இப்பகுதியில் சண்டைகள் சற்று ஓய்ந்திருந்தன. எனினும் இப் பகுதியில் விமானப்படை விமானங்கள் உலங்கு வானூர்திகள் என்பன குண்டு வீச்சுத் தாக்குதல்களைத் தொடர்ச்சியாக

முயற்சியைக் கைவிட்டனர்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

# மூதூர் இராணுவமுகாமில் ஆறு பொதுமக்கள் கைது

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டம் மூதூர் ஜி. பி எஸ். இராணுவ முகாமிற்குப் புகைப்படத்தினை உறுதிப்படுத்தச் சென்ற ஆறு பொதுமக்களை சிறிலங்கா இராணுவத்தினர் கைது செய்துள்ளனர்.

இராசரத்தினம்நாராயணம் (2-ம்வட்டாரம், கட்டைபறிச்சான்), சுப்பிரமணியம் கிருஷ்ணானந்தன் (2-ம் வட்டாரம், கட்டைபறிச்சான்), அகிலேசப்பிள்ளை செல்வரத்தினம் (4-ம் வட்டாரம், கட்டைபறிச்சான்) மார்க்கண்டு விஸ்வரெத்தினம் (2-ம் வட்டாரம், கட்டைபறிச்சான்) மார்க்கண்டு தவேந்திரராசா (3-ம் வட்டாரம், கட்டை

(4 ஆம் பக்கம் பார்க்க)

# வெற்றிலைக்கேணிக்கு உயர் அதிகாரிகள் விஜயம்

சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ரணதுங்க கூட்டுப்படைத் தலைமைத்தளபதி ஹமில்ரன் வனசிங்க, வடபகுதி இராணுவ நடவடிக்கைப் பொறுப்பதிகாரி மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ ஆகியோர் வெற்றிலைக்கேணி இராணுவ முகாமிற்குச் சென்றதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவர்கள் யாழ்ப்பாணத்தில் இராணுவ நடவடிக்கைக்குப் பொறுப்பான பிரிகேடியர் விஜய விமலரட்ணவையும் ஏனைய அதிகாரிகளையும் சந்தித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# செம்பியன்பற்று அகதி முகாம் மீது கடற்படை பீரங்கித் தாக்கு

## - பீதியால் மக்கள் வெளியேற்றம்

(வடமராட்சி கிழக்கு)

செம்பியன் பற்று இடம்பெயர்ந்தோர்முகாம்பகுதியை நோக்கி சிறிலங்கா கடற்படைக் கப்பல்கள் பீரங்கித் தாக்குதலையும், வெற்றிலைக்கேணியிலிருந்து சிறிலங்கா இராணுவத்தினர் எறிகணைத் தாக்குதலையும் மேற்கொண்டுள்ளார்கள்.

செம்பியன்பற்று இடம்பெயர்ந்தோர் முகாம்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் அனுசரணையுடன் அமைக்கப்பட்டு, செஞ்சிலுவைச் சங்கத்தால்பராமரிக்கப்பட்டு, வருபவையாகும்.

நேற்று அதிகாலை (திங்கள்) செம்பியன் பற்றுக் கடலில் இருந்துசிறிலங்காகடற்படைக் கப்பல்கள் பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டன.

இச்சம்பவத்தின் போது சில தனியார் கட்டடங்கள் சேதமடைந்தன.

அதேவேளை வெற்றிலைக்கேணி சிறிலங்கா முகாமிலிருந்து ஏவப்பட்ட எறிகணைகள் முகாம்கள் அமைந்துள்ள பகுதியில் வந்து விழுந்துள்ளன.

சில எறிகணைகள் வெடிக்காத நிலையில் மணலில் புதையுண்டு கிடப்பதை காணக் கூடியதாகவுள்ளது.

இச் சம்பவங்களையடுத்து, முகாம்களில் உள்ள குடும்பங்கள் பீதியினால் வெளியேற ஆரம்பித்துள்ளன.

இதேவேளை மருதங்கேணி, தாளையடி, செம்பியன்பற்றுப் பகுதிகளில் சிறிலங்கா இராணுவத்தினரால் மேற்கொள்ளப்படுகின்ற எறிகணைத் தாக்குதலைத் தொடர்ந்து அப்பகுதி மக்கள் இடம் பெயரத் தொடங்கியுள்ளார்கள்.

இடம் பெயரும் மக்கள் மாமுனை, நாகர் கோயில் பகுதிகளை நோக்கி செல்ல ஆரம்பித்துள்ளார்கள். (36)

# குடிமனைகள் மீது ஹெலி துப்பாக்கிச் சூடு

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்குப் பகுதிக்கு மேலாகப்பறந்துசெல்லும் உலங்கு வானூர்திகள் குடியிருப்புக்களை நோக்கி வேட்டுக்களை இடையிடையே தீர்த்த வண்ணம் செல்கின்றன.

நேற்று முன்தினம்இரவு ஆம்பன் குடத்தனைப் பகுதிகளை நோக்கி உலங்குவானூர்திகள் வேட்டுக்களை தீர்த்த வண்ணம் சென்றன. (36)

# தீன்பிஹா உடன்பாடு இருநாட்டு உறவில் ஒரு மைல் கல்

இந்தியாவுக்கும், பங்களாதேஷிற்கும் இடையில் நீண்டகாலப் பிரச்சினையாக இருந்து வரும் தீன்பிஹாப் பகுதியை இந்தியா பங்களாதேஷின் பகுதியில் கடந்த வாரம் திறந்து விட்டது. இந்து தீவிரவாதிகளின் கடுமையான எதிர்ப்புகளின் மத்தியில் இந்தியா மேற்கொண்ட இந் நடவடிக்கையானது இரு நாடுகளுக்கும் இடையேயான உறவில் முக்கியமான ஓர் மைல் கல் என விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர்.

1947 ஆம் ஆண்டு பிரித்தானிய ஆட்சியிலிருந்து இந்தியா சுதந்திரம் அடைந்த போது அது இந்தியா எனவும் பாகிஸ்தான் எனவும் பிளவுபட்டுக் கொண்டது. இந் நிலையில் எவ்வித திட்டமும் இல்லாமலே இரு நாடுகளினதும் எல்லைகளும் நிர்ணயிக்கப்பட்டன.

இந்தியாவைச் சேர்ந்த சில சிற்றூர்கள் பாகிஸ்தானிய கிராமங்களினால் சூழப்பட்ட நிலையிலும் பாகிஸ்தானிய சிற்றூர்கள் இந்தியக் கிராமங்களால சூழப்பட்ட நிலையிலும் எல்லைக்கோடு வகுக்கப்பட்டது இதன் மூலம் 130 இந்தியக் கிராமங்கள் கிழக்கு பாகிஸ்தானிற்குள்ளும் 93 பாகிஸ்தானிய கிராமங்கள் இந்தியப்பகுதியிலும் அமைநது கொண்டன.

இவ்வாறு கிழக்குப் பாகிஸ்தானுக்குள் அகப்பட்டுக் கொண்ட ஒரு இந்தியக் கிராமம் தான் தீன்பிஹா - இது சனத்தொகையிலும் பரப்பளவிலும் மிகவும் சிறியது.

இதனை குறிப்பிட்டகாலத்திற்கு பங்களாதேஷின் கட்டுப்பாட்டுக்குள் குத்தகைக்கு விடுவதற்கான ஒப்பந்தமொன்று 1974 ஆம் ஆண்டு இந்தியப் பிரதமர் இந்திரா காந்திக்கும் பங்களாதேஷ் பிரதமர் முஜிபுர் ரஹ்மானிற்கும் இடையே கைச்சாத்திடப்பட்டது.

ஆனாலும் இதன்மூலம் வன்செயல்கள் உருவாகலாம் என்ற அச்சம் காரணமாக பதினெட்டு வருட காலமாக இதனை செயற்படுத்த முடியவில்லை.

பங்களாதேஷ் பிரதமர் பேகம் காலிதா சியா அண்மையில் இந்தியாவுக்கு மேற்கொண்ட விஜயத்தின் பின்னர் இந்த ஒப்பந்தத்தைச் செயற்படுத்துவதெனவும் இரு நாடுகளும் இணங்கிக் கொண்டன.

தீன்பிஹா குறிப்பிட்ட காலத்திற்கு பங்களாதேஷிடம் கையளிக்கப்பட்டிருக்கும் போது அப்பகுதி மக்கள் சுலபமாக பங்களாதேஷிற்குள் சென்றுவரக் கூடியதாக இருக்கும்.

அத்துடன் இந்தியாவுக்குள் வரும் மற்றொரு பங்களாதேஷ் சிற்றூரான தாக்ரம் பகுதியைச் சேர்ந்தவர்கள் தீன்பிஹா ஊடாக தமது தேவைகளையும் பூர்த்தி செய்ய சென்று வரமுடியும். தீன்பிஹா மக்கள் தாக்ரம் பகுதி யூடாக சென்று வர முடியும்.

தீன்பிஹா பகுதி பங்களாதேஷிற்கு தற்காலிகமாக மாற்றப்படுவதை பாரதிய ஜனதாக் கட்சியும் அதற்கு ஆதரவான தீவிரவாதக் கட்சிகள்சிலவும் கடுமையாக எதிர்க்கின்றன.

இப்பகுதி பங்களாதேஷிற்கு கையளிக்கப்பட்ட போது பொலிசாருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையில் நடைபெற்ற மோதலின்போது ஆர்ப்பாட்டக்காரர் இருவர் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டது

இப்பகுதி பங்களாதேஷிடம் நிரந்தரமாக கையளிக்கப்படவில்லை எனவும் ஆறுமாத காலப்பகுதிக்கு மட்டுமே கையளிக்கப்படுவதாகவும் அப்பகுதியில் இந்தியக் கொடியே தொடர்ந்தும் பறக்கும் எனவும் இந்திய அரசு அறிவித்துள்ளது.

## வல்வெட்டித்துறை நகரில் சுற்றுலாக்காரியாலயம்

(பருத்தித்துறை)

''வல்வெட்டித்துறை நகரத்தில் பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் சுற்றுலாக்காரியாலயம் ஒன்று பிரதி செவ்வாய்க்கிழமை தோறும் இயங்கவுள்ளது. இச் சுற்றுலாக் காரியாலயத்தை நடைமுறைப் படுத்துவதற்கான நடவடிக்கைகளை உடன் மேற்கொள்ளுமாறு பருத்தித்துறைப் பிரதேச செயலருக்குப் பணிக்கப் பட்டுள்ளது.''

மேற்கண்டவாறு, பருத்தித்துறை பிரதேச செயலக இடமாற்றத் திறப்பு விழாவிலே பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு புதிய செயலகத்தைத் திறந்து வைத்து உரையாற்றிய வடக்கு-கிழக்கு மாகாண சபையின் யாழ். மாவட்ட பிரதி ஆணையாளர் திரு. து. வைத்திலிங்கம் தெரிவித்தார். பருத்தித்துறை நகரில் முன்னர் உதவி அரசாங்க அதிபர் பணிமனையாக இருந்த இடத்தில் இங்கு மூன் வைக்கப்பட்டது. இப்பிரதேச செயலகம் இவைகளைப் படிப்படியாக வேண்டியபடி நிறைவேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளும், இங்கு விடுக்கப்பட்டுள்ள கோரிக்கைகளில் ஒன்றான வல்வெட்டித்துறையில் பிரதேச செயலகத்தின் சுற்றுலாக்காரியலயத்தை இயங்கச் செய்வதற்கு உடன் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பருத்தித்துறை பிரதேச செயலருக்கு பணித்துள்ளேன். இச் சுற்றுலாக் காரியாலயம் எதிர் வரும் செவ்வாய்க்கிழமை தொடக்கம் இயங்கும். பிரதேச செயலகம் சிறப்பாக இயங்கி இப்பிரதேச மக்களுக்குச் சிறந்த சேவைகளை வழங்க இப்பிரதேச மக்கள் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

யாழ். மாவட்டதிட்டப்

## ஆய்வு வட்டம்

[குருநகர்]

யாழ். திருமறைக் கலாமன்றத்தின் ஓர் அங்கமான சைவ சித்தாந்த ஆய்வு வட்டம் எதிர் வரும் 12 ஆம் திகதி மூன்றாவது ஆண்டு நிறைவை நடாத்த உள்ளது.

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் அன்றைய தினம் காலை 9-30 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணி வரை நடைபெறும் கருத்தரங்கிற்கு இந்து நாகரீகத் துறைத் தலைவர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் தலைமை வகிப்பார்.

சித்தாந்த வித்தகர் பண்டிதர் மு. கந்தையா (பி. ஏ.) சிறப்புரை நிகழ்த்துவார்.

## அன்பளிப்பு

கட்டைவேலி உடுப்பிட்டி தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலைக்கு 'பெற்றோல் மாக்ஸ்' ஒன்றை அன்பளிப்புச் செய்துள்ளது. (25)

## வரி விளம்பரம்

### சோதிடம்

உங்கள் குழந்தைகளுக்கு அதிர்ஷ்ட எண்களில் பெயர் வைக்க, ஜாதகம் எழுத, எதிர்காலப்பலனறிய வேண்டுமா? சோதிடர் V A. சிவராசா 152- B அரசடி றோட் கந்தர்மடம் யாழ்ப்பாணம் (2772)

### திருட்டு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை நகரில் உள்ள வெற்றி சைக்கிள் வேக்ஸ் நிலையம் இரவு வேளையில் உடைக்கப்பட்டு சுமார் 7,000 ரூபா பெறுமதியான பொருள்கள் களவாடப் பட்டுள்ளதாக நிலைய உரிமையாளர் தமிழீழக் காவல் துறையிடம் புகார் செய்துள்ளார். (25)

### விமான சேவை

(கொழும்பு)

கொழும்புக்கும், புதுடில்லிக்கும் இடையிலான விமான சேவை டிசம்பர் மாதத்தில் இருந்து ஆரம்பிக்கப்படவுள்ளது இதே வேளை வாரத்தில் செவ்வாய், சனி ஆகிய இரு தினங்களிலும் சென்னைக்கான விமானசேவை நடத்தப்படும் என்று எயர்லங்கா வட்டாரங்கள் கூறியுள்ளன.

## போலிமுகவரை தேடுவதில் பொலிசார் தீவிரம்

வெளிநாடுகளில்பணிப்பெண் வேலை பெற்றுத் தருவதாக கூறி தோட்டப் பெண்களிடம் பல ஆயிரம் ரூபாக்களை பெற்று தலைமறைவாகிவிட்ட போலி முகவரை தேடுவதில் தெரணியகலை பொலிஸார் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்

பிரஸ்தாப நபர் உடப்பாகை சப்புமால்கந்த, மாலிபொட ஆகிய தோட்டங்களுக்கு சென்று பெற்றோரிடம் ஆசை வார்த்தைகளை கூறி சுமார் தொண்ணூறாயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட தொகையை இந் நபர் பெற்றிருப்பதாக தெரிய வருகிறது

மாலிபொட தோட்டப் பெண் ஒருவர் கொடுத்த தகவலை அடுத்தே பொலிசார் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.


### கொம்பியூட்டர் வகுப்புக்கள்

புதிய கொம்பியூட்டர் வகுப்புக்கள் வாரநாட்கள், வார இறுதி நாட்களில் நடைபெற உள்ளது.

மேலதிக விபரங்களுக்கு


# தமிழ் மக்கள் காணிகளில் சிங்களக் குடியேற்றம்

(வவுனியா)

கல்வி ராஜாங்க அமைச்சர் ராஜமனோகரி புலேந்திரனின் ரகசிய நடவடிக்கையினால் தேக்கங்காடு தமிழ் மக்களின் காணிகளில் சிங்களக் குடியேற்றம் மேற்கொள்ளப்படுகின்றது.

வவுனியா கச்சேரி தமிழ் அதிகாரிகள் இக் குடியேற்றத் திட்டத்தை தடுக்கும் முயற்சிகள் தோல்வி கண்டுள்ளன.

வவுனியா நகருக்குத் தெற்கே அமைந்துள்ள இப் பகுதியில் வாழ்ந்து வந்த தமிழ் மக்கள் அனைவரும் 1990 ஜூன் மாதத்தின் பின்னர் அங்கிருந்து வெளியேறினர்கள் இராணுவ அச்சம் காரணமாக வெளியேறிய தமிழ்க் குடும்பங்கள் மீளச்சென்று தத்தமது காணிகளில் குடியேறுவதற்கு அரசாங்கம் தடைவிதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

தற்போது தேக்கங்காடு பகுதி மத்திய அரசின் காணி அமைச்சின்கீழ் கொண்டுவரப் பட்டிருப்பதாக அறியப்படுகிறது.

சில மாதங்களுக்கு முன்னர் இக் காணிகள் அரசாங்க விடுதிகள் அமைப்பதற்கும் தொழில்சாலைகள் அமைப்பதற்கும் பயன்படுத்தப்படும் என்று சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவினால் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் தற்போது கல்வி ராஜாங்க அமைச்சரினால் இப்பகுதியில் இரகசியமாக சிங்களக் குடியேற்றம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது

தேக்கங்காடு பகுதியில் தமிழ் மக்களோ, தமிழ் அதிகாரிகளோ நடமாட இராணுவத்தினர் தடைவிதித்துள்ளனர். இதனால் இடம்பெயர்ந்த தமிழ் மக்கள் மீளக்குடியமர முடியாமல் அவதிப்படுகின்றனர் என்று கூறப்பட்டது. (தி)

## 9000 மாணவர்கள் பல்கலைகழகத்திற்கு தெரிவு

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களுக்கு இம்முறை ஒன்பதாயிரம் மாணவர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர் இவர்களுக்கு இருமாதங்கள் வரை ஆங்கிலப்பயிற்சி நடத்தப்படவுள்ளது. க.பொ.த உயர்தரப் பரீட்சையில் நூற்றி எண்பது முதல், இருநூற்றி தொன்நூற்று இரண்டு புள்ளிகள் வரை பெற்ற ஒன்பதாயிரம் மாணவர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர். இவர்களில் இரண்டாயிரத்து எழுநூறு மாணவர்கள் கலைத் துறைக்காக சேர்க்கப்படவுள்ளனர்.

## தமிழ்த்தின விழா

கொழும்புத்துறை புனித ஜோசப்ஸ் வித்தியாலய தமிழ் தினவிழா இன்று (7-7-92) காலை 9 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் அதிபர் திருமதி டி. எவ் சின்னத்துரை தலைமையில் நடைபெறும்

யாழ் மாவட்ட கலை பண்பாட்டுக்கழக பொறுப்பாளர் திரு சிட்டு எழுத்தாளர் திரு. செம்பியன் செல்வன் ஆகியோர் கௌரவ விருந்தினராக் கலந்து கொள்வர்

யாழ் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு, சி. வேலாயுதம் பிரதம விருந்தினராகவும்.

திரு ஆர். எஸ் நடராசா, அருட் திரு நமசிவிரிமுத்து அடிகள், திரு ஆர் அருளானந்தம் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (21)


### தெல்லி. வடமேற்கு ஐ.நா. சங்கம்

இடம் பெயர்ந்தவர்களின் வசதிக்காக போயா தினங்களில் பி. ப 2.00 மணிக்கு சங்கானை சிவப்பிரகாச வித்தியாசாலையில் மாதாந்தப் பொதுக்கூட்டம் நடைபெறும் அண்மையிலிருக்கும் அங்கத்தவர்களையும் அழைத்து வருக.

தொடர்பு ஆ. நா. ஆறுமுகம்
மே/பா திருமதி த. இரத்தினசபாபதி
பெரியவளவு, தொட்டடி
சங்கானை.

(2771)


## நினைவு கூருகின்றோம் . . .

### 1992-07-07

1987 ஆம் ஆண்டு இதே தினத்தில் மண்டானில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

நரேஷ் (மகேந்திரன் மணிச்செல்வன் - 3-ம் வாய்க்கால், பன்னங்கண்டி, பரந்தன், கிளிநொச்சி.)

திருக்கோணமலை / சாம்பல்தீவு, சம்பூர் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் படுகொலை செய்யப்பட்ட 2 மாணவர்

ரில் முன்னர் உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் இயங்கிய கட்டடத்தில் இப் பிரதேச செயலகம் திறந்துவைக்கப் பட்டுள்ளது. இத்திறப்புவிழா விற்குப் பருத்தித்துறை பிர தேச செயலர் திரு. ச முரு கேசபிள்ளை தலைமை தாங் கினார். வல் வெட்டித்துறை சிவன் ஆலய பிரதமகுரு பிரம்மஸ்ரீ சோ. தண்டபாணி தேசிகரின் ஆசியுரையுடனும் கலைஞர் இரா. பஞ்சலிங்கத் தின் வரவேற்புரையுடனும் விழா ஆரம்பமானது. தொட ர்ந்து உரையாற்றிய பிரதி ஆணையாளர் திரு. வைத்தி லிங்கம் குறிப்பிட்டதாவது

பிரதேச செயலகங்கள் அப் பிரதேச மக்களின் தேவை களை இயன்றளவு முழுமை யாகப் பூர்த்திசெய்யவேண்டு மென்றே எதிர் பார்க்கப்படு கின்றது. இப்பிரதேசமக்களின் பல்வேறுவகையான தேவை கள், பற்றாக்குறைகள், குறைபாடுகள் பற்றி யாழ். மாவட்டதிட்டப் பணிப்பாளர் திரு. சு. பதிமநா தன் யாழ். மாவட்ட திட்ட மிடல் பிரதிப்பணிப்பாளர் திரு செ. சுவாமிநாதன், வட மராட்சி தெற்கு மேற்கு பிர தேச செயலர் திரு. செ. ஸ்ரீனி வாசன், வடமராட்சி பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. ச. செல்லத்துரை, பருத்தித் துறைமாவட்ட வைத்திய அதி காரி. டாக்டர் சி. கதிரவேற் பிள்ளை, ஒய்வூதியம் பெறு வோர்சங்கத்தலைவர் சட்டத் தரணிஆர் உருத்திரா, தொழி லதிபர்திரு ச. காந்திதாஸன், பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கத்தலைவர் திரு க. கந்த சாமி, வடமராட்சி மீனவர் கூட்டுறவுச் சங்கசெயலர் திரு ச. சுந்தரலிங்கம் ஆகியோரும் உரையாற்றினார்கள். கிராம சேவை அலுவலர் திரு எஸ். சண்முகநாதன் நன்றியுரை கூறினார் (25)


## வடபிராந்திய சுருட்டுத் தொழிலாளர் சங்க
# அறிவித்தல்


வடபிராந்திய சுருட்டுத் தொழிலாளர் சங்கத்தி னால் நடாத்தப்படும் 3ஆம் கட்ட தையல், தமிழ் தட்டச்சுப் பயிற்சிக்கான விண்ணப்பம் கோரப்படுகின் றது. 10-07-92 க்கு முன்னர் விண்ணப்பப் படிவத்தி னைப் பெற்றுக் கொள்ளவும். சுருட்டுத் தொழிலாளர் குடும்பம், மாவீரர் குடும்பம், போராளி குடும்பத்தின ருக்கு இலவசமாகப் பயிற்சி அளிக்கப்படும். பாட சாலை மாணவிகட்கான மாலைநேர பயிற்சி அளிக்கப் படும். மேலதிக விபரங்கட்கு நேரில் தொடர்பு கொள்ளவும்.

தலைவர்
இல 71, கே. கே. எஸ். வீதி, செல்லையா உருத்திரா
கொக்குவில்.
[சி/4661]


(25)

## அடையாளம் காட்டிப் பெறவும்

யாழ் சின்னக்கடைப் பகு தில் சிறு தொகைப்பணத் துடன் மணிபேர்ஸ் ஒன்று கண் டெடுக்கப்பட்டு எமது காரி யாலயத்தில் ஒப்படைக்கப்பட் டுள்ளது உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

## யுனிக்கோ கொம்பியூட்டர் சென்ரர்

37, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

(4660)



எந்த வகை **பத்திரிகைத் தாளிலும் மட்டை(BOARD)களிலும்**

மனம் நிறைந்த
தரம் குன்றாத

அச்சு வேலைகளுக்கு

தமிழ் ஆங்கிலம்
ஆகிய மொழிகளில்
துண்டுப் பிரசுரங்கள்
தொடக்கம்
பாரிய புத்தகங்கள்
வரை
பொறுப்பேற்கப்படும்.

# ஈழநாதம்

(அச்சக வர்த்தகப் பகுதி)
31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்.


வடிக்கைகளில் படுகொலை செய்யப்பட்ட 2 மாணவர் கள் உட்பட 20 தமிழர்கள்.

இதே ஆண்டு சிறிலங்கா இராணுவத்தினர் மேற் கொண்ட துப்பாக்கிச் சூட்டில் காயமுற்றிருந்து சாவ டைந்த யாழ் / வீமன்காமம் மகாவித்தியாலய அதி பர்.

1988 ஆம் ஆண்டு தங்கவேலாயுதபுரத்தில் இந்தி யப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச் சாவெய்திய -

**குமார்** (சின்னத்தம்பி குமார் - காரைதீவு - 3, அம் பாறை.)

1989 ஆம் ஆண்டு விளானில் தேசவிரோத சக்தி களினால் சுட்டுக் கொல்லப்பட்ட பண்டத்தரிப்பைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

1990 ஆம் ஆண்டு அம்பாறையில் முஸ்லிம் குழு வொன்றினால் கடத்திச் செல்லப்பட்டுக் காணாமல் போன மத்திய முகாம் 4-ம் குடியிருப்பைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன் - அக்கரைப்பற்றுக்கு வேலைக்குச் சென்று காணாமல் போன புன்னைச்சோலைக் குடியி ருப்பைச் சேர்ந்த தமிழ் இளைஞன்.

மட்டக்களப்பில் சிறிலங்காப் படையினரால் வெட் டிக் கொல்லப்பட்டு எரிக்கப்பட்ட தமிழ்ப்பொதுமகன்.

கிண்ணியாப் பகுதியில் எரிந்த நிலையில் சடலங் களாக மீட்கப்பட்ட 30 தமிழர்கள்.

திருக்கோணமலை, மட்டப்புக்கழி, நல்லூர்ப் பகு திகளில் சிறிலங்கா இராணுவத்தினர் மற்றும் ஊர் காவல் படையினரால் பாலியல் வன்முறைக்குட்படுத் தப்பட்டபின், படுகொலை செய்யப்பட்ட 10 பெண் கள், கழுத்து வெட்டிக் கொல்லப்பட்ட 20 ஆண்கள் ஆகிய 30 தமிழர்கள்.

யாழ் பண்ணை வீதியில் சிறிலங்கா இராணுவத் தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

1991 ஆம் ஆண்டு எதிர்பாராத விதமாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எம்மைப் பிரிந்த -

**பரணி | தாசன்** (நாகரத்தினம் இன்பதாசன் - 2-ம் வட்டாரம், முள்ளியவளை, முல்லைத்தீவு.)

மட்டக்களப்பு / திக்கோடை, தும்பன்கேணி, 40-ம் கிராமம் பகுதிகளைச் சுற்றிவளைத்த பெரிய போரதீவு, வெல்லாவெளி, பாலையடி வெட்டை முகாம்களைச் சேர்ந்த சிறிலங்கா இராணுவத்தினர் மற்றும் தேச விரோத சக்திகளினால் சுட்டும், வெட்டியும் கொலை செய்யப்பட்ட 3 தமிழர்கள்.

யாழ் / வலிகாமம் வடக்குப் பகுதிகளில் சிறிலங்கா இராணுவத்தினர் பிரவேசித்தது முதல் இத்தினம் வரை அவர்களது பிடியில் சிக்கிய நிலையில் மருத்துவ வசதியின்றிப் பலியான 9 தமிழர்கள்.

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்**

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/4657)

## சிந்தனைக்கு

தன் முட்டாள் தனத்தை உணர்ந்த முட்டாள்
அந்த அளவுக்காயினும் அறிவுடையவன்
தான் அறிவுடையவன் என்று எண்ணும் முட்டாள்
உண்மையிலேயே பெரும் முட்டாள்.

- கௌதம புத்தர் -

ஈழநாதம்

[illegible] வெத்திரசனிதி, யாழ்ப்பாணம் 07-07-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2889 நிர்வாகபீடம் 2808
த. பெ. எண் 05

## சிறுபிள்ளைதனமானது

சிறிலங்கா விமானப் படைக்குச் சொந்தமான சீனத் தயாரிப்பான வை-8 விமானம் நேற்று முன்தினம், விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு உள்ளாகி வான வெளியில் வெடித்துச் சிதறியது. இவ்விமானத்தில் இருந்த ஆறு விமானப்படை உயர் அதிகாரிகள் உட்பட 19 விமானப் படையினர் கொல்லப்பட்டனர்.

இயக்கச்சிப் பகுதியில் பீப்பாக் குண்டுகளை வீசிக் கொண்டிருந்த வேளையிலேயே இவ்விமானம் தாக்குதலுக்கு உள்ளாகியது. புலிகளின் விமான எதிர்ப்புப் பீரங்கிகளின் ரவைகள் விமானத்தைத் துளைத்துச் சென்றதினால் இச்சம்பவம் நிகழ்ந்தது. புலிகளின் விமான எதிர்ப்பு பீரங்கி ரவைகள் விமானத்திற்குள் இருந்த வெடிப் பொருள்களுக்குள் (பீப்பாக் குண்டுகள்) புகுந்ததினாலேயே இப்பாரிய வெடிப்பு ஏற்படுவதற்கான வாய்ப்பு உருவாகியது.

இவ்விமானம் விடுதலைப் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டதானது சிறிலங்கா விமானப் படையினருக்கு ஏற்பட்ட பாரிய இழப்பாகும். இவ்வருட ஆரம்பத்தில் சீனன்குடாவில் ஏற்பட்ட பாரிய வெடிவிபத்தின் பின்னர் ஏற்பட்ட பெரிய இழப்பாகும். சிறிலங்கா விமானப்படை வை-8 ரக விமானங்கள் இரண்டை மட்டுமே கொண்டிருந்தது: பெரிய அளவினதான இவ் விமானங்கள் பல்வேறு தேவைகளுக்காகவும் பாவிக்கப்பட்டு வந்தன. துருப்புக்களையும், ஆயுத தளபாடங்களையும் இடம்நகர்த்துவதற்கு இவ்விமானம் முக்கியமானதாக இருந்தது: அதிலும் குறிப்பாகக் காயமடைந்த இராணுவத்தினரை வடக்கிலிருந்து தெற்கே கொண்டு செல்ல இவ்விமானம் பயன்படுத்தப்பட்டு வந்தது.

இந்நிலையில், வை - 8 விமானம் ஒன்று புலிகளின் தாக்குதலினால் வெடித்துச் சிதறியது என்பது சிறிலங்கா ஆயுதப்படையினருக்கும், அரசாங்கத்திற்கும் அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது. இதன் காரணமாக விடுதலைப்புலிகளுடனான போரில், விமானப்படை வகித்துவரும் பங்குபற்றியும், எதிர்கால நடவடிக்கை குறித்தும் கேள்வி எழும்பியுள்ளது. இந்நிலையில், சிறிலங்கா இராணுவ அதிகாரிகளும், இராணுவப் பேச்சாளர்களும் இவை குறித்து முரண்பட்டான தகவல்களை வெளியிடுவதோடு இச்சம்பவத்தையும், திரித்துக்கூறவும் முற்பட்டுள்ளனர். இது சிறிலங்கா இராணுவ அதிகாரிகள் வழமையாக மேற்கொள்ளும் நடவடிக்கையாகும். வழமைபோல இன்குள்ளசிலரும் குழப்பியோ

# பாலஸ்தீனருக்குசுயாட்சி;இஸ்ரேலின்பாதுகாப்பு இதுவேதீர்வுக்கு அடிப்படை!

மேற்காசிய பிரச்சினைக்குத் தீர்வு காணும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் பலவாரங்களாக நடைபெற்று வருகின்றன. அமெரிக்கா மேற்கொண்ட முயற்சியால் இஸ்ரேலுக்கும் பாலஸ்தீன பிரதிநிதிகள் உட்பட சில அரபு நாடுகளுக்கும் இடையே இப் பேச்சுவார்த்தைகள் நீடிக்கின்றபோதிலும் இதுவரை குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்படவில்லை. இந்த நிலையில் இஸ்ரேலில் ஆட்சி மாற்றமும் ஏற்பட்டுள்ளது.

சமாதான பேச்சுக்கள் தொடங்கிய பின் ஆயிரம் கோடி டொலர்கள் கடன் வழங்குவது குறித்து இஸ்ரேலுடன் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ்புஷ் பலப்பரீட்சையில் ஈடுபட்டுள்ளார். இஸ்ரேலும் விட்டுக் கொடுக்காமல் இதுவரை தனது நிலையில் உறுதியாக இருந்து வருகிறது. இஸ்ரேலை தனது வழிக்கு வரச் செய்வதே அமெரிக்காவின் நோக்கமாகும்.

இப்பிரச்சினையில் பதில் அளிக்கப்பட வேண்டிய ஒரு அடிப்படைக் கேள்வி உள்ளது இஸ்ரேலினால் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் பாலஸ்தீனருக்கு வழங்கப்படும் பூரண தன்னாட்சியுடன் இணைந்ததாக இஸ்ரேலுக்கு உண்மையான பாதுகாப்பை உறுதி செய்யும் ஒரு தீர்வு இப் பிரச்சினைக்கு உண்டா?

நியூ மெக்சிக்கோ பல்கலைக் கழகத்தின் பொருளாதார பேராசிரியர்களான இஸஸர், ஜோனாஸ் ஆகிய இருவரும் இவ்வாறு தீர்வு அமையலாம் என்பது குறித்து தங்கள் அபிப்பிராயங்களைத் தெரிவித்துள்ளனர் மேற்குக்கரை ஆக்கிரமிப்பு எதிர்காலத்தில் செயற்பட முடியாது என்பதைபாலஸ்தீனரும் ஈராக்கிய ஜனாதிபதி சதாம் குசைனுடனான அவர்களது பக்கச்சார்பும் நீதியான மக்களை நம்பச் செய்ய வேண்டும். இதேவேளையில் வளைகுடா போரின் போது ஜோர்தானிலிருந்து உறுதிப்பாடின்மையும் ஈராக்குடனான ஜோர்தான் மன்னர் குசைனின் பக்கச்சார்பும் இஸ்ரேலுக்கு கிழக்கே மிகவும் பகைமையான அரபு கூட்டணி ஒன்று இருக்கும் சாத்தியத்தைப் பிரதிபலித்தது ஜோர்தான் ஆற்றுக்கு மேற்கே எந்த இடத்திலும் ஒரு இராணுவ எல்லையை இஸ்ரேல் ஏற்றுக் கொள்ள முடியாது என்பதையே அது உணர்த்தியது.

இஸ்ரேலின் பாதுகாப்பையும் பாலஸ்தீன சுயாட்சியையும் ஏக காலத்தில் உத்தரவாதப்படுத்தும் ஒரு தீர்வு சாத்தியமானதே. முதலில், ஒரு சில சரித்திர பூர்வ உண்மைகள் வருமாறு;

இஸ்ரேல் - பாலஸ்தீன தகராறு தொடர்பான அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்கை இன்றைய அப்பட்டமான உண்மைகளை அடிப்படையாகக் கொண்டு அமைய வேண்டும்.

1. கால் நூற்றாண்டு கால பொருளாதார தொடர்புகளும் மேற்குக் கரையில் வாழ்க்கைத் தரம் உயர்வும் இரு தரப்பினருக்கும் இடையிலான பகைமையை வெற்றி கொள்ளவில்லை.

2. இஸ்ரேலினாலோ அல்லது ஜோர்தானினாலோ தாம் ஆளப்படுவதை பாலஸ்தீனர் விரும்பவில்லை. பாலஸ்தீனரிடையேயான மௌனமான ஒரு பெரும்பான்மையினர் தமது தாயகத்தில் வாழவும் இஸ்ரேலுடன் சமாதானத்தைப் பேணவுமே விரும்புகின்றனர்.

ஜப்பா, ஹைபா ஆகிய இரு நகரங்களுக்கும் திரும்பிச் செல்வதற்கு குறைந்த எந்த ஒரு தீர்வையும் ஏற்காத ஒரு சிறு தொகையினரான பாலஸ்தீனரும் உள்ளனர்.

3. உண்மையானதும் நிலையானதுமான ஒருசமாதானத்துக்குப் பதிலாக மேற்குகரையிலும் காஸா பகுதியிலும் பாலஸ்தீனருக்கு தாயகம் ஒன்றைவழங்க இஸ்ரேலியரில் பெரும்பான்மையினர் இணங்கலாம். அவ்வாறே யூதேயாவையும் சமாரியாவையும் (மேற்குக்கரை) இணைத்துக் கொள்வதற்கு குறைந்தஎந்தஒருதீர்வையும் ஏற்றுக் கொள்ளாத ஒரு சிறு தொகையினரான யூதர்களும் இஸ்ரேலில் உள்ளனர். தீவிரப் போக்குடையோரான இந்த இரண்டு சிறுபான்மையினரதும் குறிக்கோள்களுக்கும் இணக்கம் காணமுடியாது என்பது வெளிப்படை.

1948ஆம் ஆண்டு பலஸ்தீன அகதிகளின் வழித்தோன்றல்கள் ஜப்பாவுக்கும் ஹைபாவுக்கும் திரும்பமுடியாது மேற்குக்கரையும் காஸாபகுதியும் இஸ்ரேலினால் இணைத்துக் கொள்ளப்படுவது அங்கு வசிக்கும் பாலஸ்தீனருக்கு ஏற்றுக் கொள்ள முடியாததாகும் சிறுபான்மையினர் பெரும்பான்மையினராக வரலாம் என்பதை அறிந்து கொண்டும் இணைத்துக் கொள்ளப்பட்ட பகுதிகளிலுள்ள குடியிருப்பாளருக்கு முழு உரிமைகளையும் இஸ்ரேலில் உள்ள யூதர்கள் வழங்குவார்களா?

இஸ்ரேலுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் இணைக்கப்பட்ட உண்மையான இராணுவசூனிய பாலஸ்தீன தாயகம் இரு தரப்பிலுமுள்ள பெரும்பான்மையினருக்கு ஏற்புடையதாகலாம்.

இஸ்ரேலுக்கான பாதுகாப்பு விவகாரம் தொழில்நுட்ப ரீதியில் சிக்கலானதாகும். மேற்குக்கரையின் எல்லைக்கும் மத்தியதரைக் கடலுக்கும் இடையிலான தூரம் அதன் மிகக்குறுகிய இடத்தில் ஒன்பது மைல்கள் மட்டுமே ஆகும். பாலஸ்தீனருக்கான தாயகம் கட்டாயமாக இராணுவ சூனியமற்றதாகவும் எல்லைகள் மாற்றியமைக்கப்பட்டதாகவும் இருக்க வேண்டும் என்பதையே இந்த பூகோள அமைப்பு உணர்த்துகிறது.

மேற்காசிய பிரச்சினை பற்றிய அமெரிக்காவின் கொள்கை பின்வரும் இரு அம்சங்களைக் கொண்டதாக இருக்க வேண்டும்.

★ பூரணநிலம், கடல் உரிமைகள், பொலிஸ், சிவில் நிர்வாகம், பொருளாதார அரசியல் இறைமை ஆகியவற்றுடனான இராணுவ சூனிய நாடு ஒன்று பாலஸ்தீனருக்கான தாயகமாக நிறுவப்படுதல்.

★ மேற்குக் கரையை காஸா பகுதியுடன் இணைக்கும் ஒரு தரைப்பாதையை அனுமதிப்பதற்கு ஈடாக இஸ்ரேலின் பாதுகாப்பிற்கான எல்லை மாற்றங்கள் உலகின் ஏனைய பகுதிகளுடன் பாலஸ்தீனர் சுதந்திரமாகவர்த்தகம் செய்ய இப்பாதை வழிவகுக்கும். இராணுவ தற்பாதுகாப்பு எல்லைகளைக் கொண்டிருப்பதை உறுதிப்படுத்துவதற்காக மேற்குக் கரையின் சில பகுதிகளை தன் வசம் வைத்திருப்பது இஸ்ரேலுக்கு தேவையானதாகும்.

இஸ்ரேலுக்கு பாதுகாப்பையும் பாலஸ்தீனருக்கு தன்னாட்சியையும் வழங்கும் அம்சங்கள் இத்தீர்வில் அடங்கியிருப்பதாக அவ்விரு பேராசிரியர்களும் நம்புகின்றனர்.

(நன்றி இன்டர்கோ பிரஸ்)

இஸ்ரேலில் நடைபெற்ற பொதுத் தேர்தலின்போது கடும்போக்குடையவர்கள் எனக் கருதப்படும் ஆட்சியிலிருந்த லிக்குயிட் கட்சியும், அதன் தலைவரான யிட்சாக் ஷாமிரும் தோற்கடிக்கப்பட்டுள்ளனர். பாலஸ்தீனியரின் விவகாரத்தில் மென்போக்கை கடைப்பிடிக்க தயாராகவுள்ள தொழிற் கட்சியினர் ஆட்சி அமைக்க இருக்கின்றனர். இஸ்ரேலின் மக்களிடத்திலும், ஆட்சி பீடத்திலும் ஏற்பட்டுள்ள இந்த மாற்றத்தை பல அரபுநாடுகளும் பாலஸ்தீனியர்களும் வரவேற்றுள்ளமை தெரிந்ததே.

# முஸ்லிம்களை அமெரிக்கா ஆதரித்தால் மற்றோர் வியட்நாம் உருவாகும்

### - சேர்பியத்தலைவர் எச்சரிக்கை

(லண்டன்)

பொஸ்னியா சிவில் யுத்தத்தில் அமெரிக்கப் படைகள் முஸ்லிம்களை தீவிரமாக ஆதரித்தால் ஜனாதிபதி புஷ் ஒரு வியட்நாமை எதிர்நோக்க வேண்டியிருக்கும் என அங்குள்ள சேர்பியர்களின் தலைவர் ரடோவன் கராட்ஷிக் எச்சரித்துள்ளார்.

ரிக்கா கடைப்பிடிக்கவில்லை எனக்கண்டால் அமெரிக்கப் படைகள் தாக்குதலுக்கு உள்ளாகும். இந்த நிலை யூகோஸ்லாவியாவிற்கும், பொஸ்னியா - ஹெர்ஸகோவினாவுக்கும், அமெரிக்காவிற்கும் கூட அழிவை ஏற்படுத்தும் எனவும் தெரிவித்தார்.

இதே சமயம் மூன்று லட்சங்களைச் சேர்ந்த ஆயிரம் படைவீரர்கள் சரஜீவோ விமான நிலையத்தைப் பாதுகாவல் செய்வார்கள் என ஐ. நா. அறிவித்துள்ளது

பிரான்ஸ், ரஷ்யா, எகிப்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த படையினர் சரஜீவோவுக்குச் செல்லுமாறு ஐ. நா. பொதுக் காரியதரிசியினால் கேட்கப்பட்டிருக்கிறார்கள்.

## தமிழக மூன்று இளைஞர்கள்

## ஆந்திராவில் ஆறு பேர் கைது

(டில்லி)

ஆந்திரப் பிரதேசத்தில் மிரட்டிப் பணம் பறிப்பதில் ஈடுபட்டிருந்ததாகக் கூறப்படும் ஆறு பேரைப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

இந்த அறுவரும் பஞ்சாப் தீவிரவாதிகள் என்றும், பிந்தரன்வாலே புலிகள் படையை சேர்ந்தவர்கள் என்றும் ஆந்

ஆகும். வழமைபோல இங்குள்ளசிலரும் குழம்பிப்போயுள்ளனர்.

இராணுவப் பேச்சாளரான கேணல் மூனசிங்கா இந்த விமான வெடிப்புச் சம்பவம் பற்றிக் குறிப்பிடுகையில், 'இந்த விமானம் இரத்மலானையில் இருந்து ஆயுதப்படையினருக்கான, உணவு, மற்றும் ஆயுதங்கள், வெடிப் பொருள்கள் என்பனவற்றுடன் பலாலி நோக்கிச் சென்று கொண்டிருக்கையில் வெடித்துச் சிதறியது'' எனத் தெரிவித்தார். இதேவேளை, யாழ் மாவட்ட இராணுவ நடவடிக்கைக்கான பொறுப்பதிகாரி பிரிகேடியர் விஜய விமலரெட்ண ''விடுதலைப் புலிகளின் இலக்குகள் மீது குண்டுவீசும் பணியில் ஈடுபட்டிருந்த போது விமானம் விபத்துக்குள்ளானது'' எனத்தெரிவித்துள்ளார் அதாவது விமானம் எந்தச் சேவையில் ஈடுபட்டிருந்தது என்பது குறித்தே அறிக்கைவிடும் இராணுவ அதிகாரிகள் மத்தியில் முரண்பாடு காணப்படுகிறது.

மேலும், விமானம் 5000 அடி உயரத்தில் பறந்து கொண்டிருந்த போது விபத்திற்கு உள்ளானது ஆகையால் இச் சம்பவத்திற்கும், புலிகளுக்கும் தொடர்பில்லை என இராணுவஅதிகாரிகள் அறிக்கைவிடுவது சிறுபிள்ளைத்தனமானது. கோட்டை முற்றுகையின் போதும் முதலாவது ஆனையிறவுச் சண்டையின்போது சிறிலங்கா விமானப்படையினர் புலிகளின் தாக்குதலுக்கு அஞ்சி 7000 அடிக்கு மேல் பறந்து கொண்டிருந்தனர். இதனை பின்னர் இராணுவ அதிகாரிகளே ஊர்ஜிதப்படுத்தியும் உள்ளனர். மேலும் புலிகளிடம் விமான எதிர்ப்புபீரங்கிஇருக்கின்றது என்பதை ராணுவ வட்டாரங்கள் உறுதிப்படுத்தியுள்ளன.

இந்நிலையில் விமானச்சிதைவுகள் எதையும் பெற முடியாத நிலையில் எதுவித ஆதாரமும் இல்லாமல், வானவெளியில் பறந்து கொண்டிருந்த விமானம் தற்செயலான வெடிவிபத்தினால் வெடித்துச் சிதறியது என அடித்துக் கூறுவதும் அதை மக்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என வற்புறுத்திக் கூற முற்படுவதும் எவ்வளவு மடைத்தனமானது. ஆனால், பிரிகேடியர் விஜய விமலரெட்ணா இதைக்கூட புரிந்து கொள்ள கூடியவராகத் தெரியவில்லை.

சிறிலங்கா இராணுவத்தரப்பு தொலைத்தொடர்பு சாதனவசதிகள், வெகுசனத் தொடர்பு சாதனவசதிகள் போதிய அளவில் இருப்பதினால் முழுப்பூசனிக்காயைச் சோற்றில் புதைக்க முற்படுகின்றது ஆனால், தமிழ்மக்கள் யுத்தத்தை நேரில் கண்டு அனுபவித்துக் கொண்டு இருப்பவர்கள். கடந்த கால இராணுவ அறிக்கைகளையும் நன்கு அறிந்தவர்கள் இந்நிலையில் உண்மையை அவர்களால் கண்டிட முடியும். பொய்க்கு மேல் பொய் கூறினாலும் பொய் உண்மையாகி விடாது என்பதை இராணுவதரப்பு புரிந்து கொள்ள வேண்டும்.

எச்சரித்துள்ளார்.

பிரித்தானியா தொலைக் காட்சிக்கு பேட்டியளித்தவர் மேலும் குறிப்பிடுகையில் பாரபட்சமற்ற போக்கை அமெ

தெரிவித்தார்.

இதே சமயம் மூன்று லட்சம் மக்களுக்கு பெருமளவு உணவு, மருந்து நிவாரணங்களைக் கொண்டுவருவதற்கு முன்னோடியாக மூன்று நாடு

## பெல்கிரேட் தூதுவரை பாகிஸ். வெளியேற்றியது

(இஸ்லாமபாத்)

பொஸ்னியாவில் முஸ்லிம்கள் நடத்தப்படும் விதத்திற்கு ஆட்சேபம் தெரிவித்து பாகிஸ்தான் பெல்கிரேட் தூதுவரை நாட்டை விட்டுவெளியேற்றியுள்ளது.

பொஸ்னியாவில் முஸ்லிம்கள் சகித்துக்கொள்ள முடியாதவாறு கொடுமையாக நடத்தப்படுகிறார்கள் என்று பெல்கிரேட்டில் இருந்த பாகிஸ்தான் தூதுவரை முன்பே பாகிஸ்தான் திருப்பி அழைத்துக் கொண்டது

பெல்கிரேட் தூதுவரை வெளிநாட்டு செயலகத்திற்கு அழைத்த பாகிஸ்தான் அரசாங்கம் 48 மணித்தியாலத்திற்குள் வெளியேறும்படி உத்தரவிட்டதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

## டி. கிளார்க்கின் யோசனை ஏ. என். சி.யால் நிராகரிப்பு

(ஜோகனஸ் பேர்க்)

தென் ஆபிரிக்காவில் ஜனநாயகத்தை எட்டுவதற்கான பேச்சு வார்த்தைகள் உடனடியாக நடத்தப்படவேண்டுமென்ற டி. கிளார்க்கின் யோசனையை ஆபிரிக்கதேசிய காங்கிரஸ் தலைவர் நெல்சன் மண்டேலா நிராகரித்துள்ளார்.

இக்கட்சியின் தலைமையக கூட்டத்திற்குப் பின்னர் ஜொகனஸ்பேர்க்கில் செய்தியாளர்களிடம் பேசிய மண்டேலா கட்சியின் இந்த முடிவை அறிவித்தார்.

## ஜப்பானின் நிலைப்பாட்டிற்கு பிரிட்டன் ஆதரவு

(லண்டன்)

இரண்டாம் உலக யுத்தத்திலேடோது சோவியத்தினால் கைப்பற்றப்பட்ட ஜப்பானின் நான்கு தீவுகளையும் மீள ஒப்படைத்த பின்னரே ஜப்பானிடமிருந்து ரஷ்யா எந்த உதவியும் எதிர்பார்க்க முடியும் என ஜப்பானிய பிரதமர் மிச்சிறியாசாவா தெரிவித்தார்.

மூன்றுநாள் விஜயமொன்றை மேற்கொண்டு பிரிட்டன் சென்றுள்ள இவர் அங்கு இதனைத் தெரிவித்தார்.

ஜப்பானின் இந்த நிலைப்பாட்டிற்கு பிரிட்டிஷ் பிரதமர் ஜோன் மேஜர் ஆதரவு தெரிவித்துள்ளார்.

கைத்தொழில் மயநாடுகளின் அமைப்பில் ரஷ்யாவின் அங்கத்துவத்திற்கு எதிராக ஜப்பான் கடைப்பிடிக்கும் நிலைக்கு பிரிட்டன் ஆதரவு தெரிவித்துள்ளது.

### தமிழக மூன்று இளைஞர்கள்

## 18 நாட்கள் தொடர்ந்து பாடி கின்னஸில் இடம் பெற்றனர்

(சென்னை)

தமிழ்நாட்டைச் சேர்ந்த மூன்று இளைஞர்கள் பதினெட்டு நாட்களாக தொடர்ந்து பாடியதன் மூலம் உலக சாதனைப் பட்டியல் புத்தகமான கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்று உள்ளனர். இவர்கள் மூவரும் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாவர். ஹாஜி, இ[ ] ஜேஸ்வரன், விசுவாமித்திரன் என்னும் இம் மூன்று இளைஞர்களும் தொடர்ச்சியாக மூன்நூறு மணிநேரத்தில் அறுநூற்றியொரு பாடல்களைபாடி இந்த சாதனையை நிகழ்த்தியுள்ளனர்.

மேடையிலேயே விசுவாமித்திரன் பாடல்களை எழுத ஹாஜி இசை அமைக்க இராஜேஸ்வரன் பாடல்களைப் பாடியமை குறிப்பிடத்தக்கதாகும்.

## பாரதீய ஜனதா எதிர்ப்பு

[டில்லி]

காஷ்மீருக்கு அதிக சுயாட்சி அளிக்கும் எந்தவொரு திட்டத்தையும் எதிர்க்கப் போவதாகப் பாரதீய ஜனதாக் கட்சி கூறியுள்ளது.

அக்கட்சியின் துணைத் தலைவரான கிறவுண் லால் சர்மா சண்டிகாரில் வெளியிட்ட அறிக்கையொன்றில் மேலும் காஷ்மீருக்கு அதிக சுயாட்சி வழங்கப்பட்டால் மற்ற மாநிலங்களும் இது போன்ற கோரிக்கைகளை முன்வைக்கும் இவை அங்கீகரிக்கப் பட்டால் நாட்டின் தேசிய ஒருமைப்பாட்டிற்கு ஆபத்து ஏற்படும் என்றும் தெரிவித்தார்.

சேர்ந்தவர்கள் என்றும் ஆந்திர அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்களிடமிருந்து சில ஆயுதங்களும், வெடிமருந்துகளும், எழுபத்தைந்து ஆயிரம் ரூபா ரொக்கப்பணமும் கைப்பற்றப் பட்டதாக பொலிசார் மேலும் கூறியுள்ளனர்.

## பர்மிய ராணுவம் தாக்கு; பாராளு.உறுப்பினர் பலி

[மியான்மார்]

பர்மிய இராணுவம் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை அடித்துக் கொலை செய்துள்ளது

மேலும் நான்கு பேர் இத்தாக்குதலில் காயமடைந்துள்ளனர் பர்மிய இராணுவத்தினர் பங்களாதேஷிற்கு ஓடிச்சென்ற முஸ்லிம் அகதிகளை திரும்பி வருமாறு கோரும்படி, அந்தப் பாராளுமன்ற உறுப்பினரைக் கேட்டதை அவர் மறுத்ததையடுத்து அடித்துக் கொல்லப்பட்டார் என்று மியான்மாரிலிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## ஹிட்லரின் நிலத்தடி அரண்

(பேர்லின்)

1945ஆம் ஆண்டு அடோல்ப் ஹிட்லர் தற்கொலை செய்து கொண்ட நிலத்தடி பாதுகாப்பு அரண் ஒரு ஞாபகார்த்த சின்னமாகப் பாதுகாக்க வேண்டும் என பேர்லின் நகர புதைபொருள் காரியாலய விஞ்ஞான டைரக்டர் அல்பிரட் கேனடில் தெரிவித்தார்.

மத்திய பேர்லினில் நிலத்தடியில் குழாய் முறைப்படி இந்த அரண் அமைக்கப்பட்டுள்ளது என்றும், தளபாடங்கள் வீரசாகஸ ஓவியங்கள் ஆகியன அங்கு காணப்படுகின்றன. பூமிக்கடியில் முப்பத்தியாறு அடி ஆழத்தில் அமைந்துள்ள இந்த அரணிலேயே ஹிட்லர் தற்கொலை செய்து கொண்டார்.

இந்தப் பாதுகாப்பு அரணில் சில பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன என்றும். இதர பகுதிகளைத் திறக்கத் தாம் விரும்புவதாகவும்,

ஹிட்லரின் மெய்க்காப்பாளர்களினால் உபயோகிக்கப்பட்ட அறையும், மற்றோர் அறையும் நல்ல நிலையில் இருப்பதாகவும், விஞ்ஞான டைரக்டர் தெரிவித்தார்.

ஆனால், நாஸி ஆதரவாளர்களுக்கு யாத்திரை ஸ்தலமாக அது இருக்கக் கூடாது என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

ஈழநாதம்

## இன்று தபால் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறையை நேற்று வந்தடைந்த 'குமண' கப்பலில் 549 தபாற் பொதிகள் எடுத்து வரப்பட்டுள்ளன.

இத் தபாற் பொதிகளை இறக்குவதற்கு கிடைத்துள்ள விசேட அனுமதியை அடுத்து இன்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மூலம் இப்பொதிகள் யாழ் தபாலகத்திற்கு எடுத்துவரப்படும்.

இப் பொதிகள் உடன் தரம் பிரிக்கப்பட்டு இன்றும், நாளை புதன்கிழமையும் விநியோகிக்கப்படும் என தெரிவிக்கப்படுகின்றது. (பா)

## விசர்நாய்க்கடிக்கு குடும்பஸ்தர் பலி

விசர்நாயினால் கடியுண்ட இளம் குடும்பஸ்தரொருவர் விசர்நாய்க் கடித் தடுப்பூசி ஏற்றாமையால் பலியாகியுள்ளார்.

3 பிள்ளைகளின் தந்தையான பருத்தித்துறை கல்லூரி வீதியைச் சேர்ந்த சின்னத்துரை, திருச்செல்வம் (வயது 37) என்பவரே விசர்நாய்க்கடிக்கிலக்காகிப் பலியானவராவார் இவரது மனைவிக்கும் விசர்நாய் கடித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (25)

## தென்மராட்சியில் கரும்புலிகள் தினக் கூட்டம்

கரும்புலிகள் நினைவுதினம் நேற்று முன்தினம் மட்டுவில் கமலாகனி வித்தியாசாலையில் கொண்டாடப்பட்டது.

நேற்று முன்தினமிரவு 8.00 மணியளவில் தென்மராட்சி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் காந்தண்ணா தலைமையில் நினைவஞ்சலிக் கூட்டம் ஆரம்பமானது.

தொடர்ந்து நினைவஞ்சலி உரையை தென்மராட்சி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. புரட்சி, யாழ் மாவட்ட மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் ஆர்த்தி, போராளிகளின் குடும்பநலன் காப்பக பொறுப்பாளர் திரு. தமிழன்பன், தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரமுகர் திரு. வாஞ்சிநாதன் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு இளம்பரிதி ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்த நினைவஞ்சலிக் கூட்டத்தின் சார்பில் மலரும் தமிழீழம் என்னும் நாட்டிய நாடகமும், மாவீரர் வரிசையிலே என்னும் நாடகமும் நடைபெற்றது. (பா)

### தீவக உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளை

# வேறுபிரிவுகளுடன் இணைப்பதற்கு அரச அதிபரிடம் ஆட்சேபம்

(யாழ்ப்பாணம்)

தீவக உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளை வேறு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுடன் இணைப்பதால் தீவக மக்கள் இரண்டாம் தரப் பிரஜைகள் ஆக்கப்படுவர்.

இவ்வாறு இடம்பெயர்ந்த தீவக மக்கள் நலன்காக்கும் கழகம் யாழ் அரச அதிபரிடம் நேற்று கையளித்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது

தீவகத்தைச் சேர்ந்த வேலணை, ஊர்காவற்துறை உதவி அரசாங்க அதிபர் நிர்வாக செயற்பாடுகளை வேறு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு மாற்றுதல் தொடர்பான நடவடிக்கையை ஆட்சேபித்து இடம்பெயர்ந்த தீவக மக்கள் நலன் காக்கும் கழகத்தினரால் மகஜர் ஒன்று நேற்று அரசாங்க அதிபரைச் செயலகத்தில் சந்தித்து கையளித்தனர். அம் மகஜரில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது

வேலணை, ஊர்காவற்துறை. உதவி அரசாங்க அதிபர் நிர்வாக செயற்பாடுகள் அனைத்தையும் வேறு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு மாற்றுவதாக அறிந்து மிகவும் வேதனைப்படுகின்றோம். இன்று தீவகத்தில் இருந்து இடம் பெயர்ந்து வந்த 125,000 மேற்பட்ட மக்கள் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் வாழ்கின்றார்கள். இவர்கள் அன்றாடம் அனுபவிக்கும் கஷ்டங்கள், துன்பங்கள், துயரங்கள் சொல்லில் அடங்க முடியாதவை இவர்களுடைய நலன்களைப் பேணுவதற்கு தொடர்ந்தும் வேலணை, ஊர்காவற்துறை, உதவி அரசாங்க அதிபர் பணிமனைகள் இயங்க வேண்டியது மிகவும் அவசியமாகஇருக்கின்றது இவ் உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளை வேறு உதவி அ. அ. பணிமனைகளுடன் இணைப்பதால் தீவக மக்கள் அனைவரும் இரண்டாம் தரப் பிரஜைகள் ஆக்கப்படுவதுடன் அவர்களுடைய தனித்துவத்தை இழந்து மேலும் பல சிக்கல்களுக்கு ஆளாகுவார்கள். ஆகவே தீவக மக்களுக்கு மேலும் பிரச்சினைகள் சிக்கல்களை ஏற்படுத்தாது தொடர்ந்து பணிமனைகளை இயங்க அனுமதி அளிக்குமாறு தீவக மக்களின் சார்பில் மிகவும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது

## பதவி உயர்வு

இலங்கை கல்வி நிர்வாக சேவை முதலாம் தரத்துக்கு ஐ. தம்பிமுத்து எனும் தமிழர் உட்பட 10 பேருக்குப் பதவி உயர்வு கிடைத்துள்ளது

இப்பதவி உயர்வு 1991 ஜனவரி முதலாம் திகதியிலிருந்து அமுல்படுத்தப்படவுள்ளதென கல்வியமைச்சின் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பதவிக்கு

இந்திய ராஜ்ய சபையின் துணைத் தலைவர் பதவிக்கு தெலுங்கு தேசம் கட்சியைச் சேர்ந்த திருமதி ரேணுகா சௌத்திரி நிறுத்தப்படுவார் என்று தேசிய முன்னணியின் தலைவர்களில்ஒருவரானஎன். டி. ராமராவ் கூறியுள்ளார். நேற்று முன்தினம் ஹைதராபாத்தில் இதனை அறிவித்த அவர் ஜனதா தளம் தலைவரான வி.பி. சிங்கிற்கு இது பற்றி ஏற்கனவே தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும், இடதுசாரிக் கட்சிகளின் ஆதரவு கோரப்பட்டிருப்பதாகவும் மேலும் தெரிவித்தார்.

# போராளி தமிழினியனுக்கு மக்கள் இறுதி அஞ்சலி

கட்டைக்காடு. வெற்றிலைக்கேணி, புல்லாவெளிப் பகுதிகளில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரமரணமடைந்த சுழிபுரம் இழக்கைச் சேர்ந்தவீரவேங்கை தமிழினியன் (எதிர்மன்னசிங்கம் ஆனந்தவேல்) என்பவரது புகழுடல் சுழிபுரத்திலுள்ள அன்னாரது வீட்டிலும், சுழிபுரம் ஆறுமுக வித்தியாசாலையிலும் நேற்று பொதுமக்களின் அஞ்சலிக்காகவைக்கப்பட்டது

அதனைத் தொடர்ந்து பெருமளவு மக்களும், பாடசாலை மாணவர்களும் வீரவேங்கையின் புகழுடலுக்கு அஞ்சலி செலுத்தினர். (20)

### சிறிலங்கா கடற்படையால் தாக்கப்படும்

# தமிழக மீனவர்களுக்கு மறுவாழ்வு வழங்க திட்டம்

(சென்னை)

கடலில் மீன் பிடிக்கச் செல்லும்போது சிறிலங்கா கடற்படையினரால் துன்புறுத்தப்பட்டு ...

ஜெயக்குமார் தெரிவித்திருக்கிறார்.

நேற்றுத் தூத்துக்குடியில் செய்தியாளரிடம் பேசிய அவர் பாதிக்கப்பட்ட மீனவர்கள் ...

# மேதின எழுச்சியில் பங்குபற்றிய 10 ஊர்திகளுக்குப் பரிசு

பாட்டாளி வர்க்கத்தின் எழுச்சி நாளான 1992 ஆம் ஆண்டின் மே நாளன்று விடுதலைப் புலிகளால் யாழ். மாவட்டத்தில் நடாத்தப்பட்ட மக்கள் பேரணியில் சிறப்பாக கலந்துகொண்ட மிக அலங்கார ஊர்திகளுள் 10 ஊர்திகள் பரிசில்கள் பெறுவதற்குத் தகுதியானவையாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

தெரிவுசெய்யப்பட்ட ஊர்திகளின் விபரங்களைத் தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியல் துறை யாழ் மாவட்டச் செயலகம் வெளியிட்டுள்ளது

தெரிவுசெய்யப்பட்ட ஊர்திகளின் விபரம் வருமாறு;

முதலாம் இடம்: ஊர்தி இலக்கம் 142, தென் தமிழீழத்தில் சிறிலங்கா இராணுவத்தினரின் கெடுபிடிகளால் மக்கள் படும் அவலங்களைச் சித்தரிப்பதாக அமைந்திருந்தது. (வலிமேற்கு சண்டிலிப்பாய்-பண்டத்தரிப்பு)

இரண்டாம் இடம்: ஊர்தி இலக்கம் 100, தமிழீழத்தில் சிறிலங்கா இராணுவத்தினரின் அட்டூழியங்கள். (மதி ஒளி சனசமூக நிலையம், கொடிகாமம்)

மூன்றாவது இடம்: ஊர்தி இலக்கம் 150, சிறிலங்காப் படையினரின் தாக்குதல்களினால் குடியிருக்க முடியாமல் இடம்பெயர்ந்த மக்கள்படும் இன்னல்களைச் சித்தரிப்பதானது (இடம்பெயர்ந்தோர் நலன் காக்கும் பிரிவு, தீவகம்)

நான்காவது இடம்: ஊர்தி இலக்கம்73 சிறிலங்கா(மொறட்டுவ) தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்களின் உயர்ந்த நிலையையும், தமிழீழ யாழ்ப்பாண தொழில்நுட்பக்கல்லூரி மாணவர்களின் தாழ்ந்த நிலையையும் ஒப்பீடுசெய்வதாக அமைந்திருந்தது.(ஆறாவதுசிறிலங்கா இனவாத அரசின் புறக்கணிப்பு) (யாழ் தொழில்நுட்பக் கல்லூரி, கொக்குவில்)

ஐந்தாம் இடம்: ஊர்தி இலக்கம் 50, சிறிலங்கா படையினரின் அடக்கு-ஒடுக்கு முறைகளால் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் தென் தமிழீழத்தின் இன்றைய நிலைப்பாடு. [உடுவில் தமிழ்மொழி சனசமூக நிலையம்]

ஆறாவது இடம்: ஊர்தி இலக்கம் 118 தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாறு பற்றிய விளக்கப்பாடு [தென்மராட்சி ஆய்வு நிறுவனம்]

ஏழாவது இடம்: ஊர்தி இலக்கம் 141 தமிழீழ கிராமமொன்றில் சிறிலங்கா இராணுவத்தினரின் கொடுமைகள் [பண்டத்தரிப்பு வர்த்தகர் சங்கம்]

எட்டாவது இடம்: ஊர்தி இலக்கம் 63 தமிழர்களின் கலைத்துவத்தைப் பிரதிபலிக்கும் தேர் [சங்கானை வர்த்தகர் சங்கம்]

ஒன்பதாவது இடம்: ஊர்தி இலக்கம் 152 இந்திய இராணுவ நடவடிக்கையின் போது அவர்கள் இழைத்த அட்டூழியங்கள்.[கோப்பாய் பட்டவை[

பத்தாவது இடம்: ஊர்தி இலக்கம் 77 தமிழீழ பாட்டாளி வர்க்கம் இன்றுபடும் அவலநிலை [கைதடி தெற்கு சனசமூக நிலையம்]

தெரிவு செய்யப்பட்ட பத்து அலங்கார ஊர்திகளுள் முதல் மூன்று[1 ஆம், 2 ஆம், 3 ஆம்] ஊர்திகளுக்குத் தங்கப்பதக்கங்களும் மற்றைய ஏழு ஊர்திகளுக்கு ஆறுதல் பரிசில்களும் வழங்கப்படுமென்றும் பரிசில்கள் வழங்கப்படும் இதற்கான இடம் காலம் பின்னர் அறிவிக்கப்படுமென்று விடுதலைப் புலிகள் யாழ் மாவட்டச் செயலகம் விடுத்துள்ள அறிக்கை குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் பரிசிற்குரியவர்களை அரசியல் பிரிவு - யாழ். மாவட்டச் செயலகம் - கொண்டாவிலில் தொடர்பு கொள்ளும்படியும் கேட்டுக்கொண்டுள்ளார்கள்.

### கைதுசெய்யப்பட்டோரை விடுவிக்க

# பணம் திரட்டிய வர்த்தகர் மட்டக்களப்பில் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் படையினரால் கைதுசெய்யப்பட்ட வாலிபர்களை விடுவிப்பதற்காக பணம் திரட்டிய வர்த்தகர் ஒருவரைப் பொலிசார் கைது செய்துள்ளனர். இது பற்றி மேலும் தெரிய வருவதாவது மட்டக்களப்பு அம்பாறைப் பகுதியில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இளைஞர்களை பெலிஸ் உயர் அதிகாரி ஒருவரின் உதவியோடு விடுதலை செய்து தருவதாகக்கூறி பெற்றோர்களிடம் பணம் பெற்று வந்த வர்த்தகர் ஒருவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப் பட்டுள்ளார்.

### பனாகொல தடுப்பு முகாமில்

# 45 அடி அகழிவெட்டி ஜே வி.பியினர் தப்பி ஓட்டம்

(கொழும்பு)

ஜேர்மன் யுத்தக்கைதிகளின் பாணியில் தப்பிச்செல்ல ஜே வி.பியினர் முயற்சி செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது பனாகொல இராணுவ தடுப்பு முகாமில் இருந்து நாற்பத்தைந்து அடி நீளமான அகழியொன்றை வெட்டித் தப்பிச்செல்ல ஜே வி.பியினர் எடுத்த முயற்சி இரண்டாம் உலக யுத்தத்தின்போது ஜேர்மன் கைதிகள் எடுத்த முயற்சிக்கு ஒப்பானதாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது அண்மையில் சில ஜே.வி.பியினர் தப்பிச்சென்றதையடுத்து இந்த அகழி கண்டுபிடிக்கப்பட்டதாகவும், அகழிக்கூடாக தப்பிவரும் கைதிகள் முகாமைச்சுற்றி போடப்பட்டிருக்கும் கம்பி வேலிகளுக்கூடாகத் தவழ்ந்து தப்பிச்சென்றிருப்பதாவும் கூறப்பட்டுள்ளது

### சீதனவெளியில் சுற்றிவளைப்பு

# தமிழர்மீது துப்பாக்கிச்சூடு 20 பேர் படுகாயம்

திருக்கோணமலை சீதனவெளியில் சிறிலங்கா இராணுவத்தினர் சுற்றிவளைப்பை மேற்கொண்டனர். கடந்த ...

களினால் 20 தமிழ் மக்கள் காயமடைந்துள்ளனர் சம்பவ ...

## வங்கிகள் திறந்திருக்கும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலுள்ள வங்கிக் கிளைகள் அனைத்தும் இன்று காலை 9.00 மணி முதல் காலை 10.00 மணி வரை ஒவ்வொரு நாளும் ...

களின் பிரமுகர் திரு. வாஞ்சி நாதன் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு இளம்பரிதி ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்த நினைவஞ்சலிக் கூட்டத்திற்கு 750 இற்கும் மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டனர். தொடர்ந்து தென்மராட்சி கலைபண்பாட்டுக் கழ

புகழுடல் சுழிபுரத்திலுள்ள அன்னாரது வீட்டிலும், சுழிபுரம் ஆறுமுக வித்தியாசாலையிலும் நேற்று பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து புகழுடல் கோப்பாய் மாவீரர் மயானத்திற்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது.

# ஆறு மாத மின்பாவனைக்கு 11,900 ரூபாய் கட்டணம்

(கொழும்பு)

மாதாந்த மின் கட்டணத்தை முறையாகச் செலுத்தி வந்த தெரணியகலை நபர் ஒருவருக்கு பாக்கியாக 11,990 ரூபாய் இருப்பதாக மின்சார சபை அறிவித்துள்ளது.

சம்பந்தப்பட்டவரின் மாதாந்த கட்டணம் நாற்பது ரூபாவிற்கு மேல் இல்லையென்றும், மின்சாரசபையின் கணக்குப்படி இத்தொகை இருபத்தைந்து வருடத்திற்குரியதென வும் அந்த நபர் தெரிவித்தார். தான் மின்இணைப்புப் பெற்று எட்டு வருடங்கள்தான் ஆகின்றன என்றும். அதிலும். தெரணியகலை மின்சாரசபை நகருக்கான மின்விநியோகபொறுப்பை ஏற்றுஆறு மாதங்கள் மட்டுமே ஆகின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

## மேசன் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

கோக்குவில் தொழில் நுட்பக் கல்லூரியில் உடனடியாக மேசன் பயிற்சிநெறி வகுப்பு ஆரம்பிக்கப்படவுள்ளது.

இப்பயிற்சி நெறியில் பயில்வோருக்கு நாளொன்றுக்கு 30 ரூபா படியாக வழங்கப்படும் 16 வயதிற்கு மேற்பட்டோர் உடனடியாக இப்பயிற்சி நெறிக்கு சேர்த்துக் கொள்ளப்படுவர்என தொழில் நுட்பக் கல்லூரிவட்டாரங்கள் தெரிவிக்கின்றன.


## 1991 - ஏப்பிரல் விசேட G.C.E. (A/L) பரீட்சை

மேற்படி பரீட்சையில், கணிதத்துறையில் 280 புள்ளிகளுக்கு மேல், உயிரியல் துறையில் 270 புள்ளிகளுக்கு மேல், முகாமைத்துவத் துறையில் 280 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவ மாணவிகளையும் அவர்களின் பெற்றோர்களையும் இன்று 92-07-07 (செவ்வாய்க்கிழமை) மாலை 4-00 மணிக்கு யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் காரியாலயத்திற்கு வரும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

24, கொழும்புத்துறை வீதி,<br>
சுண்டிக்குளி,<br>
யாழ்ப்பாணம்.

நடவடிக்கைக்குழு<br>
(சி/4662)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி. 31 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 07 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


# மறுவாழ்வு வழங்க திட்டம்

(சென்னை)

கடலில் மீன்பிடிக்கச் செல்லும்போது சிறிலங்கா கடற்படையினரால் துன்புறுத்தப்பட்டு மீன்பிடிக்க இயலாதவர்களுக்கு நிரந்தர மறுவாழ்வுக்கு வழிகோலும் வகையில் திட்டம் ஒன்று மேற்கொள்ளப்படும் என்று தமிழ்நாடு மீன்வளத்துறை அமைச்சர் டி. ஜெயக்குமார் தெரிவித்திருக்கிறார்.

நேற்றுத் தூத்துக்குடியில் செய்தியாளரிடம் பேசிய அவர் பாதிக்கப்பட்ட மீனவர் ஒவ்வொருவருக்கும் இறால்ப் பண்ணை அமைப்பதற்கு அரை ஏக்கர் நிலம் வழங்கப்படும் என்றார் இதற்காக ஏழரைக் கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

பீகார் தேர்தல் ரத்தானது குறித்து

# இந்திய ஜனாதிபதியிடம் ஜனதாதளம் கவலை

(டில்லி)

இந்தியக் குடியரசுத் தலைவர் ஆர். வெங்கட்ராமனை நேற்று முன்தினம் ஜனதா தளம் கட்சியின் தூதுக்குழு வொன்று சந்தித்துப் பேசியுள்ளது. அப்போது பீகாரில் அண்மையில் நடைபெற்ற சட்டமன்ற மேலவை, மற்றும் ராஜ்யசபை இடங்களுக்கான தேர்தல்களை தேர்தல் கமிஷனர் ரத்துச் செய்திருப்பது பற்றிய தமது கவலையை அவர்கள் வெளியிட்டனர். தன்னிச்சையான முடிவுகளை தேர்தல் கமிஷன் எடுத்திருப்பதாக ஜனதாதளக் கட்சியின் பிரதிநிதியான ஹரி கிஷோர் சிங் செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.

## 'நெய்தல்'

விழாவினை ஆரம்பித்து வைப்பார்.

வரவேற்புரையை கடற்புலிகள் மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் நளாயினியும் வெளியீட்டுரையைவிடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை அவர்களும் நிகழ்த்துவர்.

இந்நிகழ்ச்சியில்கடற்புலிகள் சிறப்புத் தளபதி சூசை அவர்கள் கலைஞர்களைக் கௌரவிப்பார்.

ஆசியுரையை வணபிதா யோசேப் ஜீ ஏ. பிரான்சிஸ் அடிகள் நிகழ்த்துவார் சிறப்புரைகளைமு.வே. யோ வாஞ்சிநாதன் தமிழீழ விடுதலைப் புலிகள்நிதிப் பொறுப்பாளர் செ. தமிழேந்திஇன்னிசைவேந்தர் பொன் சுந்தரலிங்கம்ஆகியோர் நிகழ்த்துவர்.

வலிகாமம் கிழக்கு கடற்புலிகள் அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் சங்கீதன் நன்றியுரை நிகழ்த்துவார்.

## வெற்றிகரமாக

மேலும் விமானம் வெடித்துச் சிதறியது படையினருக்குப் பின்னடைவுஎன்பது நிச்சயம் என அடையாளம் கூற விரும்பாத இராணுவ அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

வை-8 விமானம் வெடித்துச் சிதறியது புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் உள்ள பகுதி புலிகளிடம் 50 எம் எம் விமான எதிர்ப்புக் குண்டுகள் பொருத்தக் கூடிய பீரங்கிகள் ஏற்கனவே உள்ளன. இது சுமார் 2000 மீற்றர் உயரத்தில் பறக்கும் விமானத்தைச் சுட்டு வீழ்த்தக் கூடியது என்பதாகவும். வெடித்துச் சிதறிய விமானம் 1800 மீற்றர் தூரத்திலேயே பறந்து கொண்டிருந்தது என்பதாகவும். விமான எதிர்ப்புப் பீரங்கியைப் புலிகள் இப்பகுதியிலேயே வைத்திருந்தனர் என்பதாகவும் புலிகள் இப்போது இந்த விமானத்தைச் சுட்டு வீழ்த்தியிருக்கும் வாய்ப்புகள் அதிகமாக இருப்பதாகவும் ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

# தமிழர்மீது துப்பாக்கிச்சூடு 20 பேர் படுகாயம்

திருக்கோணமலை சீனன் வெளியில் சிறிலங்கா இராணுவத்தினர் சுற்றிவளைப்பை மேற்கொண்டனர். கடந்த சனியன்று இடம் பெற்ற இச் சுற்றிவளைப்பின் போது பொதுமக்கள் மீது சிறிலங்கா இராணுவத்தினர் பல தடவை கண்துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளனர்.

இத்துப்பாக்கிப் பிரயோகங்களினால் 20 தமிழ் மக்கள் காயமடைந்துள்ளனர் சம்பவத்தின் போது காயமடைந்த தமிழ் மக்களை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல இராணுவத்தினர் மறுத்து விட்டனர் இதனால் பாரதூர நிலைக்கு வலைக்கிடமாயுள்ளது.

## அலங்கார உற்சவம்

கல்வியங்காடு அருள்மிகு ராஜேஸ்வரி அம்பாள் ஆலய அலங்கார உற்சவம் நேற்று ஆரம்பமாகியுள்ளது. தொடர்ந்து 9 தினங்களுக்கு அபிஷேகப் பூசை இடம்பெறும். பத்தாம்நாள் 15-07-92-ல் விசேட பூசையும், திருவூஞ்சலும், வீதியுலாக்காட்சியும் இடம் பெறும்.

## மூதூர்

பற்சான்), நாகரத்தினம் கேதீஸ்வரன் (4-ம் வட்டாரம் கட்டைபறிச்சான்) ஆகிய ஆறு பொதுமக்களே சிறிலங்கா இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டவர்களாவர்.

## வீரச்சாவு

வேல் சுழிபுரம் வடக்கு சுழிபுரம்) எனனும் போராளி வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

இவருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## சிங்கள

தினம் இடம்பெற்ற இம்மோதலில் இரண்டு சீன தயாரிப்பு டாங்கிகள் இரண்டும் புலிகளின் எறிகணைத் தாக்குதலுக்கு இலக்காகி முற்றாக நாசமடைந்தமை தெரிந்ததே.

## பாதுகாப்பு

அதிகாரி ஹமில்ரன்வனசிங்க ஏயர் மார்சல தினேஷ்குணவர்த்தன ஆகியோருடன் உயர் அதிகாரிகளும் பலாலிக்கு சென்றதாக அறிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்திலுள்ள வங்கிக் கிளைகள் அனைத்தும் இன்று காலை 9.00 மணி முதல் காலை 10.00 மணி வரை ஒவ்வொரு நாளும் வேலை நாட்களில் வாடிக்கையாளர்கள் வசதிக்காக திறக்கப்படும்.

இந்த முடிவு நேற்று எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு-கிழக்கு முஸ்லிம்களை

# திருப்தி செய்யாத தீர்வை முஸ்.காங்கிரஸ் ஏற்காது

(கொழும்பு)

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் வாழும் முஸ்லிம்களை திருப்தி செய்யாத எந்தத் தீர்வையும் முஸ்லிம் காங்கிரஸ் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளாது என்று முஸ்லிம் காங்கிரஸின் பதினோராவது பேராளர் மாநாட்டிற்கு தலைமை தாங்கிப் பேசிய எம். எச். எம். அஷ்ரப் வலியுறுத்திக் கூறினார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில், மட்டக்களப்பு. திருக்கோணமலை, வன்னி மாவட்டங்களில் வாழும் முஸ்லிம்களை திருப்திபடுத்தாத எந்தத் தீர்வுக்கும் முஸ்லிம் காங்கிரஸ் தமிழ்க் கட்சிகளோடு உடன்பாட்டிற்கு வராது என்று தெரிவித்தார்.

## நேற்று

கணைத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன

## மேலும் இருவார நிவாரண உதவி

(யாழ்ப்பாணம்)

இராணுவ நடவடிக்கை காரணமாக வலி வடக்கில் இருந்து இடம்பெயர்ந்தோருக்கு மேலும் இரு வாரத்திற்குரிய நிவாரணம் வழங்கப்படும்

இவ் இருவார உலர் உணவு வழங்குவதற்கு செமு பில் இருந்து கிடைத்தஅனுமதியை அடுத்து யாழ். அரச அதிபர் இதற்கான உத்தரவைப்பிறப்பித்துள்ளார் (பா)

# உள்வந்த வெளிச் சென்ற வாகன இலக்கங்கள்

06. 07. 1992

எமது பதிவிலுள்ள கடைசி இலக்கம் 4744

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கங்கள்:-

26-7252, 24-4282, 26-8138, 26-1728 27-4628, 26-2973, 26-3130, 24-6336, 26-2272 24-6075, 26-8430 73 1953, 73-664. 24-7087. 27-4239 28 2345, 28 3528, 40-1188, 27-7756 27-1187, 25-7443: 25-1334, 36-4230, 25-3674, 70-5873, 70-4853, 72-9437.